செ.வெ.எண்: 899 13/10/2010.

1. விசைத்தறி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தால் 1995ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

   விசைத்தறி தொழில் மேம்பாட்டிற்கும் விதைச்தறி துணிகளின் ஏற்றுமதி வளர்ச்சிக்கும் பல விதங்களிலும் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டு வருவதே இதன் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும். நெசவாளர்களின் தொழில் மேம்பாட்டிற்காக பல்வேறு அரிய திட்டங்களை செயல்படுத்த வேண்டி சம்பந்தப்பட்ட துறையினரிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2. விசைத்தறி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் முக்கிய பணிகளாவன: விசைத்தறித்தொழிலுக்கு ஊக்கமளித்தல், உறுதுணையாயிருத்தல், வளர்ச்சிக்கு பணியாற்றுதல் மற்றும் விசைத்தறியின் எண்ணிக்கையை உயர்த்துதலும் விசைத்தறி துணிகளின் ஏற்றுமதிக்கு வழிகாட்டுதலும்.

3. விசைத்தறி துணி தயாரிப்பாளர்களிடம் புதிய மற்றும் நவீன உத்திகளை கையாண்டு அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளின் தரத்தை தொடர்ந்து மேலான நிலையில் வைத்திருக்கச்சொல்லி வலியுறுத்துதல்.

4. இந்தியாவில் மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் வியாபார கூட்டங்கள் மற்றும் ஜவுளி கண்காட்சி போன்றவற்றில் கலந்துகொண்டும் அதே போன்று வாங்குவோர் விற்போர் சந்திப்பு கூட்டங்களை தாமே நடத்திவருவதும் இதன் முக்கிய பணியாகும். இதுபோன்ற சந்திப்புகளின் வாயிலாக வாங்குவோர் மற்றும் விற்போர் நேரடியான அறிமுகம் கிடைத்து விசைத்தறி துணி தயாரிப்பாளர்களின் வாணிபம் சிறக்க உதவுகிறது.

5. அரசாங்கத்தின் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிந்துகொண்டு மானியம் மற்றும் அரசாங்கத்தின் உதவியை விசைத்தறி தொழில் வளர்ச்சிக்கு பெற்று தருவது இதன் பணியாகும்.

6. கடந்த 01.04.2010 தேதி வரையில் 22.48 லட்சம் விசைத்தறிகள் அமைக்கப்பட்டு 5.6 மில்லியன் பேர் விசைத்தறி தொழிலில் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர் மேலும் 36644 மில்லியன் ச.மீ. (62%) விசைத்தறி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்பது ஒரு கணக்கெடுப்பு செய்தியாகும்.

7. கடந்த 2009-10 ஆண்டில் விசைத்தறி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக்கழகத்தன் செயல்பாடுகள்:

   - வெளிநாடுகளில் நடந்த 10 ஜவுளி கண்காட்சிகளில் கலந்து கொண்டுள்ளது.
   - மேலும் 10 வாங்குவோர் விற்போர் சந்திப்புக் கூட்டத்தை இந்தியாவில் நடத்தியுள்ளது.

விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பல நவீன இயந்திரங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் அறிந்துகொள்ளும்

- வகையில் பல மில்களை நேரில் சென்று பார்வையிட ஏற்பாடு செய்தல். இதன் மூலம் சுமார் 706 விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- நெசவாளர்களின் நலனுக்காக அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள குழு காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் விசைத்தறி தொழிலாளர்கள் சுமார் 2381 பேர்களை சேர்த்து பயனடையச்செய்துள்ளது.
- அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் பல ஆசிய நாடுகளிலிருந்தும் பல்வேறு விசைத்தறி துணி இறக்குமதியாளர்களை நமது நாட்டிற்கு வருகைதரச்செய்து இங்குள்ள விசைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுடன் நேரடியான சந்திப்பை ஏற்படுத்தி அவர்களது ஏற்றுமதி தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிசெய்யும் வகையில் உலகளாவிய வாங்குவோர் விற்போர் சந்திப்புக் கூட்டத்தை கடந்த மார்ச் மாதத்தில் நடத்தியது இதன் சிறந்த பணிகளுள் ஒன்றாகும். அதன் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது பதிப்பாக வருகின்ற டிசம்பர் மாதம் 4 மற்றும் 5 இரண்டு நாட்கள் அதே போன்ற உலகளாவிய வாங்குவோர் விற்போர் சந்திப்புக் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இச்சந்திப்பில் உலகளவில் பல நாடுகளிலிருந்தும் இறக்குமதியாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.
- நடப்பு ஆண்டில் இதுவரையிலும் டிரினிடாட் & டொபேகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், அல்மாட்டி (கஸகஸ்தான்) போன்ற வெளிநாடுகளில் நடைபெற்ற ஜவுளி கண்காட்சிகளில் கலந்து கொண்டுள்ளது. மற்றும் இந்தியாவில் மிக முக்கிய மாநிலங்களில் அதாவது கொல்கத்தா, பெங்களூர், புதுச்சேரி, கொச்சின் (கேரளா) மற்றும் தற்போது சென்னை போன்ற இடங்களில் வாங்குவோர் விற்போர் சந்திப்பினை நடத்தி வருகின்றோம், இதேபோன்று மதுரை மற்றும் நாகர்கோவிலிலும் நடத்த உள்ளோம்.

1. இந்திய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த விசைத்தறி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்த வாங்குவோர் விற்போர் சந்திப்புக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் முக்கிய உட்கருத்து விசைத்தறி நெசவாளர்கள் அவர்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் அவர்களுடைய தொழில் வளர்ச்சிக்கும் ஒரு களத்தை உருவாக்கித் தருவதேயாகும். இதற்கு தேவைப்படும் நிதியுதவியை இந்திய அரசாங்கம், ஜவுளி ஆணையர் அலுவலகத்தின் வாயிலாக அளித்து வருகின்றது.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9